1987 நவம்பர் 12] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

8. இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள செல வினங்கள் எதிர்பாராத இனங்கள் ஆகும். 1987–88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகளுடன் இவற்றுக்கும் அனுமதி வழங்க வேண்டி யிருந்தது. இத்திட்டங்களை அரசு சரியான முறையில் செயல் படுத்திட இயலும் வகையில், இந்தத் துணை மதிப்பீடுகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் ஒப்புதல் அளிக்குமாறு இப் பேரவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12–10.)

7. அறிவிப்பு.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987–88 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக் கைகள் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர் கள் பேரவையின் 190–வது விதிக்கிணங்க 13–11–1987 வெள்ளிக் கிழமை மாலை 3–00 மணிக்குள் பேரவைச் செயலகத்திலே கொடுக்க வேண்டும்.

8. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர் களால் கொண்டுவரப்பட்டுள்ள மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசும்போது நான் சொல்லியிருந்த பல விஷயங்களுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மரியாதைக்குரிய அதிகாரி களும் ஒவ்வொன்றுக்கும் பதில் அளித்திருக்கிறார்கள். அந்த பதில் கொடுத்தது சிறப்பான முறையில் நடைபெற வேண்டும் என்று அவர்களை அன்போடு நான் முதலில் வேண்டிக்கொள்கி றேன்.

நம்முடைய மாநிலம் மின் உற்பத்தியில் மூன்றாவது இடத் திலே இருக்கிறது என்பதும், மின் விநியோகத்தில் முதல் இடத் திலே இருக்கிறது என்பதும் உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒன்றுதான். இங்கே பேசிய பல உறுப்பினர்கள், நாம் பல திட்டங்களைப் போடுகிறோம், அந்த திட்டங்களை மத்திய அரசு கிடப்பிலே போடுகிறது, அந்தத் திட்டங்களை அலட்சியம் செய்கி றார்கள், அதற்காகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்